**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.130 /2019**

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7ம் நாள் சனிக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3–ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

P.W.1 இளங்கோ வயது 49, த/பெ முத்துசுவாமி

**குறுக்கு விசாரணை**

நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள சொத்து விவரத்தில் உள்ள சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் கூற முடியுமா என்றால் சர்வே எண். 100/3, விஸ்தீரணம் 40 சென்ட் ஆகும். மேற்படி சர்வே எண்ணில் பிரச்சினை என்பதால்தான் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இதற்கு முன் மேற்படி சர்வே எண்.100/3, யாருடைய அனுபவத்தில் இருந்தது என்றால் 1ம் பிரதிவாதி யசோதா என்பவர் அனுபவத்தில் இருந்தது. அதேப்போல் குப்புசாமி, முத்துசாமி யார் என்றால் முத்துசாமி என் தந்தை, குப்புசாமி என் பெரியப்பா ஆவார். என்னுடைய தந்தை பாகத்தை வைத்துதான் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2. என் தந்தை, மற்றும் பெரியப்பா என்ன வேலை செய்தார்கள் என்றால் இருவரும் ராணுவத்தில் பணி புரிந்தனர். மேற்படி இருவருக்கும் பாகப்பிரிவினை எந்த வருடத்தில் ஏற்பட்டது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பாகப்பிரிவினை எப்போது நடந்தது என்றால் நான் பிறப்பதற்கு முன்பே பாகப்பிரிவினை ஏற்பட்டு விட்டது. மேற்படி பாகப்பிரிவினையின் அடிப்படையில்தான் அவரவர் பாகத்தில் விவசாயம் செய்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான்.

3. லட்சுமி என்பவர் என் தாயார், கண்ணம்மாள் என்பவர் என் தந்தையின் முதல் மனைவி மற்றும் பெரியம்மா என்றால் சரிதான். என் தந்தையின் பாகப்பிரிவினையில் பாத்தியப்பட்ட சொத்தில்தான் லட்சுமி வாரிசுதாரர்களும், கண்ணம்மாள் வாரிசுதாரர்களும் அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் என் சகோதரி கலைச்செல்வி ஆவார். என் தந்தையின் சொத்தில் லட்சுமி வாரிசுதாரர்களும், கண்ணம்மாள் வாரிசுதாரர்களும் சமமான பாகம் மற்றும் உரிமை உள்ளது என்றால் சரிதான்

4. கண்ணம்மாள் வாரிசுதாரர்கள் தாவா சொத்தில் பிரச்சினை உள்ளது என்று வழக்கு ஏதேனும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கிணற்றின் சர்வே எண் என்ன என்றால் பட்டா எண். 630, சர்வே எண்.110/5 ஆகும். மேற்படி பாகப்பிரிவினை பாத்தியப்படி குப்புசாமி, முத்துசாமி ஆகியோருக்கு கிணற்றில் சம பங்கு உள்ளது என்றால் சரிதான். அதேப்போல் முத்துசாமி கிணற்று பாகத்தில் லட்சுமி, கண்ணம்மாள் வாரிசுதாரர்களுக்கு சம பங்கு உண்டு என்றால் சரிதான்.

5. அதேப் போல் பிரதிவாதிகளுக்கு பாதி பங்கும் எனக்கு 1/4 பங்கும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிணற்றில் தூர் வாரியது எந்த வருடம் என்றால் வருடம் தற்போது எனக்கு நினைவில்லை, ஆனால் அப்போது நான் 4ம் வகுப்பு படித்து வந்தேன். தூர் வாரும் போது என் தந்தை பாகத்தில் மட்டும்தான் செய்தோம் என்றால் குப்புசாமி, முத்துசாமி 2 பேரும் சேர்ந்துதான் தூர் வாரினார்கள். மின் இணைப்பு எண். 47 யார் பெயரில் உள்ளது என்றால் குப்புசாமி பெயரில் உள்ளது. கண்ணம்மாள் வாரிசுதாரர்களும், லட்சுமி வாரிசுதாரர்களும் எந்த வருடத்தில் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது.

6. மேற்படி பாகப்பிரிவினையை என் தந்தைதான் செய்து வைத்தார் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் மின் இணைப்பு எண். 47 பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு குறிப்பிடவில்லை என்று கூறினார். என்னுடைய பாகத்தில் நான் எந்த மின் இணைப்பை பயன்படுத்தி பயிர் வைத்து வருகிறேன் என்றால் 47.

7. குப்புசாமி பிரதிவாதியின் தந்தையா, மாமனாரா என்றால் மாமனார் ஆவார். பிரதிவாதியின் மின் இணைப்பில்தான் நான் இத்தனை வருட காலமாக பயிர் வைத்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா வழக்கில் கிணற்று தண்ணீரில் மட்டும் பாகம் இருப்பதை கூறியுள்ளோம், ஆனால் மின் இணைப்பில் பாகம் இல்லை என்பதை பற்றி குறிப்பிடவில்லை

என்றால் கிணறு மற்றும் மின் இணைப்பு பொதுவான சொத்தாகும். மேற்படி இரண்டு ஆவணமும் பொதுவானது என்பதற்கு ஏதேனும் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சிட்டா தாக்கல் செய்துள்ளேன்.

8. மேற்படி சிட்டாவில் மின் இணைப்பு மற்றும் கிணறு பற்றி குறிப்பு ஏதும் இருக்காது என்றாலும், நான் இவ்வழக்கிற்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சாட்சி சிட்டாவில் இருக்காது என்று கூறினார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கிணற்றை பற்றிதான் குறிப்பிட்டு சொல்லியுள்ளார்கள், மின் இணைப்பை பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும், சொல்லியிருந்தால் நான் தாவா வழக்கில் குறிப்பிட்டிருப்பேன் என்றால் வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்திய போது மேற்படி விவரம் எழுதவில்லை.

9. குப்புசாமியும், முத்துசாமியும் ராணுவத்தில் பணி புரிந்து இவ்வழக்கின் மின் இணைப்பு குப்புசாமி பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் 1ம் பிரதிவாதி யசோதா என்பவரின் கணவர் பெயர் ராமமூர்த்தி என்று குறிப்பிட்டு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பியுள்ளேன் என்றாலும், 1ம் பிரதிவாதியின் கணவர் பெயர் ராமசந்திரன் (எ) ராமமூர்த்தி ஆகும். என் தந்தையின் முதல் மனைவியின் மகன் பெயர் என்ன என்றால் ராமமூர்த்தி ஆகும்.

10. வழக்கில் ராமமூர்த்தி என்று குறிப்பிட்டு என் பெரியம்மா மகன் மீது போடப்பட்ட வழக்கு, இவ்வழக்கில் உள்ள 1ம் பிரதிவாதியின் கணவர் பெயர் ராமசந்திரன் என்றாலும், நான் வழக்கை மாற்றி போட்டு விட்டேன் என்றால் சரியல்ல, நான் அதற்கடுத்து வரும் வழக்கறிஞர் அறிவிப்பில் பெயரை சரியாக குறிப்பிட்டு அனுப்பியுள்ளேன். இத்தனை ஆண்டு காலமாக பிரதிவாதிகளின் மின் இணைப்பை தான் பயன்படுத்தி வருகிறேன், தற்போது கிணற்று தண்ணீரில் பாகம் இல்லை என்று பிரதிவாதிகள் மீது உள்ள காழ்புணர்ச்சி காரணமாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

11. இவ்வழக்கின் கிணற்று தண்ணீரில் பிரதிவாதிகளுக்கு 1/2 பாகமும், எனக்கு 1/4 பாகம் உள்ள நிலையில் நான் பிரதிவாதிகளுக்கு கிணற்று தண்ணீரில் பாகம் இல்லை என்று கூறுவது சட்டப்படி செல்லாது என்பதால் இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
Arni